கரூர் சம்பவம்

முதல்வர் ஏன் பயப்படுகிறார், பதட்டமடைகிறார்; உள்நோக்கம் இருக்கிறது: எடப்பாடி குற்றச்சாட்டு

சென்னை, அக்.15–

கரூர் 41 பேர் பலி சம்பவத்தில் முதலமைச்சர் ஏன் பயப்படுகிறார்; பதட்டமடைகிறார் என்று எடப்பாடி பழனிசாமி கேட்டார்.

போதிய போலீஸ் பாதுகாப்பு கொடுக்காதது தான் 41 பேர் உயிரிழப்புக்கு காரணம் என்றும் இதில் மர்மம் உள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கரூரில் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்து பேசினார். இதனை தொடர்ந்து எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசுகையில் முதலமைச்சருடன் காரசார விவாதம் நடைபெற்றது. தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து அமைச்சர் சிவசங்கர் பேசிய நிலையில், அதனை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்பட அண்ணா திமுக எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர். மேலும், பேரவையில் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் அண்ணா தி.மு.க.வினர் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

எடப்பாடி பேட்டி

வெளிநடப்பு செய்த பின்னர் சட்டப்பேரவை வளாகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைக் குறித்து பேரவையை ஒத்திவைத்து விவாதம் நடத்த வேண்டும் என பேரவைத் தலைவரிடம் கோரிக்கை வைத்தேன். அதை ஏற்பதாகக் கூறிய பேரவைத் தலைவர், இதுகுறித்த ஒருசில விளக்கங்களை முதல்வர் தருவார் என்று குறிப்பிட்டார்.

கரூர் சம்பவம் குறித்து, பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் கருத்துகளைத் தெரிவித்த பிறகுதான், முதல்வர் பதிலளிப்பது பொருத்தமாக இருக்கும். விதி எண் 56ன் கீழ் பேச வாய்ப்பு கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு, முதல்வரை அழைத்து அரசின் கருத்துகளைக் கூறலாம் என்று அனுமதியளித்தார். முதல்வர் சொன்ன கருத்துகளையெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். கரூர் நிகழ்வில் திமுக அரசின் நடவடிக்கைகளை முதல்வர் தெரிவித்தார். பூஜ்ஜிய நேரத்தில் முதலில் எதிர்க்கட்சி தலைவருக்கு பேச வாய்ப்பு தராமல் முதலமைச்சரை பேச அனுமதி அளித்தது ஏன்?

செருப்பு வீச்சு

கரூரில் மக்கள் சந்திப்புக் கூட்டத்தில் தவெக தலைவர் மீது செருப்பு வீசப்பட்டது. இதனை பேரவையில் கூறினால் நீக்கிவிடுவார்கள் என்பதால்தான், இங்கு கூறுகிறேன். அந்தக் கூட்ட நெரிசலில் 41 பேர் பலியாகினர். இந்தக் கூட்டத்துக்கு ஸ்டாலின் தலைமையிலான அரசு முழுமையான பாதுகாப்பு கொடுத்திருந்தால் உயிர்ப் பலியைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், இந்த அரசு எதிர்க்கட்சிக்கு ஒரு நீதியாகவும் ஆளுங்கட்சிக்கு ஒரு நீதியாகவும்தான் பார்க்கப்படுகிறது.

அது எந்த எதிர்க்கட்சியாக இருந்தாலும். கரூர் கூட்டத்துக்கு முழுமையான பாதுகாப்பை காவல்துறை அளிக்காததாலும், இந்த அரசின் அலட்சியத்தாலும் 41 பேர் உயிரிழந்திருக்கின்றனர். இதனையும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கி விட்டதாகக் கருதுகிறேன்.

போலீஸ் பாதுகாப்பு இல்லை

ஏற்கெனவே தவெக தலைவரின் திருச்சி, அரியலூர், நாகை, திருவாரூர், நாமக்கலுக்கு பிறகுதான் கரூர் வந்தார். ஆகையால், ஏற்கெனவே நடந்த கூட்டத்துக்கு எவ்வளவு பேர் வந்தனர் என்பது காவல்துறையினருக்குத் தெரியும், உளவுத் துறைக்கும் தெரியும், அரசுக்கும் தெரியும். அதற்கேற்றவாறே இடத்தை ஒதுக்கியிருக்க வேண்டும். அவர் கேட்ட இடத்தையும் ஒதுக்கவில்லை. மக்கள் பங்கேற்கும் அளவுக்கு காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தால், உயிர்ச் சேதத்தைத் தடுத்திருக்கலாம். அதனைச் செய்யவும் அரசு தவறி விட்டது.

கரூர் பாதுகாப்புப் பணியில் 500 பேர் ஈடுபடுத்தப்பட்டதாக சமூக ஊடகங்களில் பார்த்தேன். ஆனால், அந்தக் கூட்டத்தில் 500 காவலர்கள் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. எவ்வளவு காவலர்கள் சம்பவ இடத்தில் இருந்தனர்? 500 பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டதாக ஏடிஜிபி கூறினார். ஆனால், 600க்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட்டதாக இன்று முதல்வர் கூறுகிறார். இதிலேயே எவ்வளவு முரண்பாடு இருக்கிறது. இதனால்தான், இந்தச் சம்பவத்தில் அரசின் மீது மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

வேலுச்சாமிபுரத்தில் தவெகவுக்கு மக்கள் சந்திப்புக்காக இடம் ஒதுக்கினர். கடந்த ஜனவரி 24–ந் தேதியில், இதே இடத்தை நாங்கள் கேட்டோம். எம்ஜிஆரின் 108 ஆவது பிறந்தநாள் பொதுக் கூட்டம் நடத்த வேண்டும் என்று கேட்டபோது, காவல்துறை அனுமதிக்கவில்லை. வேலுச்சாமிபுரத்தில் அதிகளவில் மக்கள் போக்குவரத்து, குறுகிய சாலை, கூட்டம் கூடும்போது இருபுறமும் சாலை மறிக்கப்படும் சூழல் ஏற்படுவதால், அந்த இடத்தைத் தரவியலாது என்று மறுத்தனர். ஏற்கெனவே நிராகரிக்கப்பட்ட இடத்தைத்தான், தவெகவின் மக்கள் சந்திப்புக் கூட்டத்துக்குக் கொடுத்திருக்கின்றனர்.

உள்நோக்கம்

நிராகரிக்கப்பட்ட இடத்தை எப்படி கொடுப்பீர்கள்? ஏற்கெனவே 4 மாவட்டங்களில் கூட்டம் நடத்தியிருக்கிறார்

எவ்வளவு மக்கள் கூடியிருக்கின்றனர் என்பது அரசுக்கும் காவல்துறைக்கும் தெரியும். அப்படியிருந்தும், ஏதேனும் ஓர் அசம்பாவிதம் ஏற்பட வேண்டும் என்ற உள்நோக்கத்தோடுதான், வேலுச்சாமிபுரத்தைக் கொடுத்ததாக மக்கள் பேசுகின்றனர். இதுதான் முழுமையான உண்மை என்று நாங்களும் கருதுகிறோம்.

கரூர் 41 பேர் பலியான சம்பவத்தில் முதலமைச்சர் ஏன் பயப்படுகிறார், ஏன் பதறுகிறார். இதில் உள்நோக்கம், மர்மம் இருக்கிறது. போதிய பாதுகாப்பு அளிக்காததே 41 பேர் பலிக்கு காரணம் என்பது தெளிவாகிறது.

கரூர் சம்பவம் குறித்து சிபிஐ விசாரணை நடத்த சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. இந்த விசாரணையை ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி கண்காணிக்கவும் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

கரூர் சம்பவத்தில் பல்வேறு பிரச்சனைகள் வருகிறது. செருப்பு வீசியது, ஆம்புலன்ஸ் வந்தது, மின் விளக்கு அணைக்கப்பட்டது, போலீஸ் தடியடி நடத்தியது போன்றவை எல்லாம் விசாரணைக்கு வரும். எனவேதான் முதலமைச்சருக்கு பயம் வந்துவிட்டது. எனவே தான் இந்த ஆட்சி நடந்த தவறை மறைக்கப் பார்க்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

கரூர் சம்பவம்: முதலமைச்சர் – எடப்பாடி காரசார விவாதம்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்தபோது முதல்வர் என்ன சொன்னார் என்பதை சொல்லவா? என்று கேட்க, உடனே எடப்பாடி பழனிசாமி, கள்ளக்குறிச்சியில் விஷச்சாராயம் குடித்து உயிரிழந்த 60 க்கும் மேற்பட்டோர் தமிழக மக்கள்தான். அங்கு செல்லாதது ஏன்? என்று கேட்டார்.

உடனே மு.க.ஸ்டாலின் குறுக்கிட்டு, கள்ளக்குறிச்சி சம்பவம் வேறு. அங்கு விஷச்சாராயம் குடித்து உயிரிழந்தார்கள். ஆனால், கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி அப்பாவி மக்கள் பலியானார்கள் என்றார்.

கூட்டநெரிசல் சம்பவம் குறித்து அரசு அதிகாரிகள் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தது ஏன்? என்று எடப்பாடி பழனிசாமி கேட்டார்.

சபைக்குள் தர்ணா

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வேண்டுமென்றே அரசியல் நோக்கத்துடன் சமூக வலைதளங்களில் அரசுக்கு எதிராக தவறான கருத்துகளை பரப்பியதால் தான் அதிகாரிகள் விளக்கம் அளித்தனர் என்று கூறினார்.

சட்டப்பேரவையில் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து அமைச்சர் சிவசங்கர் பேசிய நிலையில், அதனை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்பட அண்ணா திமுக எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

மேலும், பேரவையில் தரையில் அமர்ந்து கோஷம் எழுப்பி தர்ணா போராட்டத்தில் அண்ணா தி.மு.க.வினர் ஈடுபட்டனர்.

இதனிடையே, தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதா? இல்லையா? என்று முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து, இருக்கையில் அமர்ந்து கேள்விகளை எழுப்புமாறு அவை முன்னவரும் அமைச்சருமான துரைமுருகன் கூறினார்.

இதனிடையே, அமளியில் ஈடுபட்ட அண்ணா திமுகவினரை வெளியேற்ற அவைக் காவலர்களை பேரவைத் தலைவர் அழைத்த நிலையில், அண்ணா தி.மு.க.வினர் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

தமிழகத்தில் 3 நாள் கனமழை எச்சரிக்கை

சென்னை, அக். 15–

தமிழகத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு கனமழைக்கான (ஆரஞ்சு) எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

தென்தமிழகத்தில் அநேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ராமநாதபுரம், புதுகோட்டை, தஞ்சை, நாகை, காரைக்கால், திருவாரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், 16–ந்தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல், தேனி, தென்காசி, மதுரை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதி களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

17–ந்தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஈசாப் இந்தியா லிமிடெட்

CIN: L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம்: மனை எண்.13, 3வது பிரதான சாலை, தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை 600 058.

தொலைபேசி எண்: 044– 4228 1100, I இ–மெயில் investor.relations@esab.co.in

நிறுவனத்தின் பங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (IEPF) மாற்றுவது தொடர்பாக பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் பணத்தைத் திரும்பப் பெறுதல்) விதிகள், 2016 ("விதிகள்") மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 124(6) மற்றும் அதன் அடுத்தடுத்த திருத்தங்களின் விதிகளுக்கு இணங்க, பங்குதாரரால் தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக ஈவுத்தொகை செலுத்தப்படாமலோ அல்லது கோரப்படாமலோ உள்ள அனைத்து பங்குகளையும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (IEPF) சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்ற நிறுவனம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. அத்தகைய பங்குகள் நிதிக்கு மாற்றப்பட வேண்டிய முப்பது நாட்களுக்குள் மாற்றப்படும்.

மேற்கூறிய விதிகளின் அடிப்படையில், 2018–19 நிதியாண்டிற்கான செலுத்தப்படாத/உரிமை கோரப்படாத இடைக்கால ஈவுத்தொகை 2018 மற்றும் தொடர்புடைய பங்குகளை, குறிப்பிட்ட ஈவுத்தொகை அறிவிக்கப்பட்டு செலுத்தப்பட்ட ஏழு ஆண்டுகள் கடந்துவிட்டன என்பதைக் கருத்தில் கொண்டு, நிறுவனம் இப்போது IEPF சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றும்.

IEPF சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்படும் பங்குகளின் விவரங்கள் மற்றும் அத்தகைய பங்குதாரர்களின் பட்டியல் நிறுவனத்தின் இணையதளத்தில் (www.esabindia.com) பதிவேற்றப்படும். 13, அக்டோபர் 2025 அன்று, நிறுவனம் / பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA) பதிவுகளில் உள்ள சமீபத்திய மின்னஞ்சலில் அந்தந்த பங்குதாரர்களுக்கு தனிப்பட்ட அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள், டிசம்பர் 25, 2025 அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படாத/உரிமை கோரப்படாத ஈவுத்தொகைத் தொகையைப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு கோரப்படாவிட்டால், அத்தகைய பங்குகளில் சேர்ந்துள்ள அனைத்து நன்மைகளையும் உள்ளடக்கிய உரிமை கோரப்படாத ஈவுத்தொகை மற்றும் தொடர்புடைய பங்குகள், ஏதேனும் இருந்தால், அவை IEPF சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்படும்.

மேற்கூறிய சட்டத் தேவைகளுக்கு இணங்க, நிறுவனம் டிசம்பர் 25, 2025க்குப் பிறகு எந்த அறிவிப்பும் இல்லாமல் நடவடிக்கையைத் தொடங்கும் என்பதை கவனத்தில் கொள்ளலாம்:

1) டிமேட் முறையில் வைத்திருக்கும் பங்குகளைப் பொறுத்தவரை – பங்குகளை நேரடியாக பங்குதாரர்களின் டெபாசிட்டரிகள் மூலம் IEPF–ன் டிமேட் கணக்கிற்கு மாற்றம் செய்யப்படும்.

2) பங்குகள் காகித முறையில் இருந்தால் – அசல் பங்குச் சான்றிதழுக்குப் பதிலாக புதிய நகல் பங்குச் சான்றிதழை வழங்குவதன் மூலம், பின்னர் அதை டெபாசிட்டரிகள் மூலம் டிமேட் முறையில் மாற்றுவதன் மூலம் நிதிக்கு மாற்றம் செய்யப்படும்.

IEPF சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட்ட பிறகு, சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் பங்குகள் மற்றும் ஈவுத்தொகையைப் பெற விரும்பினால், விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, IEPF–5 படிவத்தில் IEPF ஆணையத்துக்கு விண்ணப்பிக்கலாம். இது IEPF இணையதளமான www.iepf.gov.in–ல் கிடைக்கிறது.

செலுத்தப்படாத/உரிமைகோரப்படாத ஈவுத்தொகை(களை) கோருவதற்கான கூடுதல் தகவல்/கோரிக்கைக்கு, சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் நிறுவனத்தின் RTAவை இங்கே தொடர்பு கொள்ளலாம்:

இன்டகிரேடெட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவெட் லிமிடெட்
இரண்டாவது தளம், "கென்சஸ் டவர்ஸ்", எண்.1 ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600 017.
தொலைபேசி 044 28140801803, பேக்ஸ் 044 28142479
மின்னஞ்சல் einward@integratedindia.in

ஈசாப் இந்தியா லிமிடெட்டிற்காக

இடம்: சென்னை — **ஜி பாலாஜி**
தேதி: 15 அக்டோபர், 2025 — **நிறுவன செயலாளர்**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பத்தூர் முன்பாக

O.S. எண்.306/ 2024

M/s. தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி லிமிடெட், அம்பத்தூர் கிளை, **... மனுதாரர்**

-எதிரிடை-

திரு.T. சிவாநந்தன் ... எதிர்மனுதாரர்

பெறுநர்
திரு.T. சிவாநந்தன் த/பெ. தனஅரசு நாடார்
எண்.S-6, P.V. ராஜமன்னார் சாலை,
TNHB குவாட்டர்ஸ், விஜயராகவபுரம்,
கே.கே. நகர், சென்னை - 600 078
மேலும்: எண்.4/19, பிருந்தாவன் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 038

மேற்குறிப்பிட்ட பெயருடைய மனுதாரர் / மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பத்தூர்-ல் எதிர் மனுதாரரிடமிருந்து **ரூ.61,196.28/-** வசூலிப்பதற்காக மேற்குறிப்பிட்ட O.S. எண்.306/2024 விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளார். எதிர் மனுதாரருக்கு எதிராக அழைப்பாணை / அறிவிப்பு சாதாரண முறையில் செயல்படுத்த முடியாததால் மாண்புமிகு நீதிமன்றம் மாற்று சேவைக்கு மேற்குறிப்பிட்டுள்ள O.S. எண்ணில் உத்தரவிட்டுள்ளது. ஆகையால் இந்த அறிவிப்பு செய்திதாளில் பிரசுரிக்கப்படுகிறது.

எனவே தாங்கள் **17.10.2025 அன்று காலை 10.30 மணிக்கு** மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அம்பத்தூர், சென்னை முன்பாக நேரிலோ அல்லது அறிவுறுத்தப்பட்ட வழக்கறிஞர் மூலமாகவோ நேரில் ஆஜராகி எழுத்துப்பூர்வ அறிக்கையை தாக்கல் செய்து மற்றும் தங்களுக்கு எதிராக ஏன் இந்த பரிகாரம் வழங்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தை தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

ஒருவேளை ஆஜராக தவறும்பட்சத்தில் சட்டப்படி தாங்கள் இல்லாமலேயே மனு விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்று இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

J. பழனி கார்த்திக்
S. உஷா லஷ்மி
S. சாரதாதேவி
தமிழரசன்.A
வழக்கறிஞர்கள்
5/PC2, 1வது தளம், பாரதி சாலை,
முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037
போன்: 044 - 25330762
செல்: 98416 77916

பெயர் மாற்றம்

நான், Shaik Ahamed Majeed பிறந்த தேதி: 11-05-1964 எண்.3/9, மூன்றாம் தளம், பிச்சாண்டி லேன், ராயபுரம், சென்னை- 600013. தமிழ்நாடு மாநிலம் என்ற முகவரியில் வசிக்கும் நான் இனிமேல்

S Abdul Majeeth

என்று அழைக்கப்படுகிறேன்.

- Shaik Ahamed Majeed

IN THE COURT OF THE ADDITIONAL DISSTRICT JUDGE AT CHENGALPATTU
O.S.NO. 604 OF 2022

M/s. Canara Bank (Previously Syndicate Bank), Selaiyur Branch, Represented by its authorized Signatory The Branch Manager ...Plaintiff

Vs

Londen Plaza, Through its Proprietor Ayubkhan S/o.Syed, No.4/866, Perumbakkam Main Road, Medavakkam, Chennai-600 100 Defendant

NOTICE

Please take notice that the above case is posted on 31.10.2025 before the Hon'ble ADJ Judge at Chengalpattu for your appearance, Kindly attend the above said court on 21.10.2025 at 10.30 a.m. before the above said the Hon'ble Court.

Failing which the matter will be heard in your absences set ex-parte.

N.Pandiarajan
Counsel for the Petitioner

மேன்மைமிகு உட்கோட்ட நிர்வாக நடுவர்/சார் ஆட்சியர், திண்டிவனம்
இறப்பு சி.ப.வ.எண் : அ4/121/2025
நாள் : 11.09.2025

திண்டிவனம் வட்டம், பாதிராப்புலியூர் கிராமம், தலையாரி தெரு என்ற முகவரியில் வசிக்கும் கலிவரதன் (லேட்) குமாரர் முருகன் ... மனுதாரர்

பொது அறிவிப்பு

மனுதாரராகிய நான், எனது பாட்டனார் ராமசாமி த/பெ. குப்பன் என்பவர் திண்டிவனம் வட்டம், பாதிராப்புலியூர் கிராமத்தில் கடந்த 18.03.1980ம் தேதியில் இறந்தார் என்பதையும், மேற்படியாரின் இறப்பை எங்களின் கவனக்குறைவின் காரணமாக பதிவு செய்ய தவறிவிட்டோம். தற்போது ராமசாமி என்பவரின் இறப்புச் சான்றிதழ் வாரிசு சான்று மற்றும் பட்டா பெயர் மாற்றம் செய்ய எனது பாட்டனார் ராமசாமி என்பவரின் இறப்பு சான்று வேண்டி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினத்திற்குள் இந்நீதிமன்றத்தில் எழுத்துமூலமோ அல்லது நேரிலோ ஆஜராகி ஆட்பேனை தெரிவிக்கலாம். தவறினால் இம்மனுவில் ஏதும் ஆட்சேபனை இல்லையென பாவித்து ஒருதலைபட்சமாக தீர்மானித்து உத்திரவாகி விடும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

முருகன் த/பெ. கலிவரதன் (லேட்)
தலையாரி தெரு,
பாதிராப்புலியூர் கிராமம்,
திண்டிவனம் வட்டம்.

ஏல அறிவிப்பு

[illegible] (பி) லிட்

[illegible] 07.11.2025 [illegible] 11.00 [illegible] BRANCHES – [illegible] Note:Customers can release the gold ornaments UPTO 04/11/2025. [illegible] Pancard,Photo ID Proof, GSTIN Number (in case of Registered Dealers) [illegible]

M/S.BOHRA'S AUCTIONEERS

இன்ஸ்பிரிசிஸ் சொல்யூஷன்ஸ் லிமிடெட்

CIN : L30006TN1995PLC031736

பதிவு அலுவலகம்: முதல் மாடி, தவ்லத் டவர்ஸ், புதிய கதவு எண். 57, 59, 61 மற்றும் 63, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010. **தொலைபேசி எண் :** 044 4225 2000
இணையதளம் : www.inspirisys.com **மின்னஞ்சல்** : sundaramurthy.s@inspirisys.com

பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

காகித வடிவிலான பங்குகள் தொடர்பான பரிமாற்ற கோரிக்கைகளை மீண்டும் வைப்பதற்கான சிறப்பு சாளரம்

ஏப்ரல் 01, 2019க்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட, நிராகரிக்கப்பட்ட / திருப்பி அனுப்பப்பட்ட / ஆவணங்களில் உள்ள குறைபாடு காரணமாக கவனிக்கப்படாத பரிமாற்றப் பத்திரங்களை மீண்டும் சமர்ப்பிப்பதற்கு ஒரு சிறப்புச் சாளரம் திறக்க செபி அனுமதித்துள்ளது. ஜூலை 02, 2025 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண். **SEBI//HO/MIRSD/MIRSD-PoD/P/CIR/2025/97]**

முக்கிய விவரங்கள் :–		
மறு தங்குமிடத்திற்கான சாளரம்	**ஜூலை 07, 2025 முதல் ஜனவரி 06, 2026 வரை**	
பரிமாற்ற கோரிக்கையை யார் மீண்டும் தாக்கல் செய்யலாம்?	ஏப்ரல் 2019க்கு முன்பு பரிவர்த்தனை பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்களின் / செயல்முறை / அல்லது வேறு ஏதேனும் குறைபாடு காரணமாக நிராகரிக்கப்பட்ட / திருப்பி அனுப்பப்பட்ட / செயல்படுத்தப்படாத முதலீட்டாளர்கள்.	
பரிமாற்ற கோரிக்கைகளை மீண்டும் எவ்வாறு தாக்கல் செய்வது?	அசல் பரிமாற்ற ஆவணங்களை, திருத்தப்பட்ட அல்லது விடுபட்ட விவரங்களுடன், பதிவு மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (முன்னர் லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)–க்கு சமர்பிக்கவும்.	
	அஞ்சல் முகவரி	C 101, எம்பஸி 247, L.B.S. மார்க், விக்ரோலி (மேற்கு), மும்பை – 400083.
	உதவி எண்.	+91 8108116767
	ஏதேனும் கேள்விகளுக்கு	https://web.in.mpms.mufg.com/helpdesk/Service_Request.html உங்கள் சேவை கோரிக்கையை இங்கே எழுப்புங்கள்.

பரிமாற்றத்திற்காக மீண்டும் பதிவு செய்யப்பட்ட பங்குகள் டிமேட் முறையில் மட்டுமே வழங்கப்படும்.

இன்ஸ்பிரிசிஸ் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டிற்காக
S. சுந்தரமூர்த்தி
கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 15.10.2025

குமரி நற்பணி மன்றம்

(பதிவு எண்.251/1977)

Ho: 13/7, திருவேங்கடபுரம் மெயின் ரோடு, சூளைமேடு, சென்னை–600 094.
Bo: 5, மண்ணடி, ஒத்தவாடை தெரு, வில்லிவாக்கம்,சென்னை–600 049.
போன்: 8148146631

பொதுக்குழு கூட்ட அறிவிப்பு

குமரி நற்பணி மன்றத்தின் பொதுக்குழு கூட்டம் அடுத்த மாதம் (நவம்பர்) 1ந் தேதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மன்ற தலைவர் G.K. தாஸ் தலைமையில் ''அன்னை மாளிகை'' எண்.40, திருவேங்கடபுரம் மெயின் ரோடு, சூளைமேடு, சென்னை–600094. என்ற முகவரியில் நடைபெறும் இக்கூட்டத்தில்:

1. குமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைந்த நாள் தின நிகழ்ச்சி
2. குமரி கையேடு வெளியிடுதல்
3. குமரி நற்பணி மன்ற 2026–2029ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தேர்தல்

ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் குடும்பத்துடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இக்கூட்டத்தில்

1. 2024–2025க்கான வரவு செலவு கணக்குகள் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்படும்.
2. முந்தைய பொதுக்குழு தீர்மானங்களுக்கு ஒப்புதல் பெறப்படும்.
3. மன்ற வளர்ச்சி மற்றும் நல உதவித் திட்டங்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படும்.
4. மதிய விருந்து வழங்கப்படும்.

நிர்வாகிகள் தேர்தல் – அட்டவணை

பதவிகள்: தலைவர் –1, செயல் தலைவர் –2, துணைத் தலைவர் –15, பொதுசெயலாளர் –1, துணைபொது செயலாளர் –15, செயலாளர் –15, பொருளாளர் –1, செயற்குழு உறுப்பிளர் – 20,

* **தேர்தல் நாள் :** 01.11.2025, பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
* **வாக்கு எண்ணிக்கை :** மாலை 5.00 மணி
* **தேர்தல் அலுவலர் :** திரு. D.ஏசா, BA BL
* **தேர்தல் உதவி அலுவலர்கள் :** திரு. P.ராஜேஷ், MA, ML., செல்வி ராஜேஷ் MA, ML.,
* **தேர்தல் நடைபெறும் இடம் :** 40, திருவேங்கடபுரம் மெயின் ரோடு, சூளைமேடு, சென்னை–600094
* **வேட்புமனு தாக்கல் :** 18.10.2025 மற்றும் 19.10.2025 காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை
* **வேட்புமனு பரிசீலினை :** 21.10.2025 மாலை 5 மணி
* **வாபஸ் பெற கடைசி நாள் :** 22.10.2025 மாலை 5 மணி
* **வேட்பு மனு கட்டணம் அனைத்து பதவிகளுக்கும் :** ரூ. 1000/–
* **செயற்குழு உறுப்பினர்களுக்கு :** ரூ. 500/–

A.இராபர்ட் புரூஸ்
(பொது செயலாளர்)
செல்: 8072064430

இடம் : சென்னை
தேதி : 13.10.2025

படிவம் எண். INC 26

[நிறுவனங்கள் (துவக்கம்) விதிகள், 2014ன் விதி 30ன் படி]

நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவதற்கான பத்திரிக்கையில் வெளியிடப்படும் விளம்பரம்.

மத்திய அரசு தென் பிராந்தியம் முன்பாக,

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 13ன் துணைப் பிரிவு (4) மற்றும் நிறுவனங்கள் (துவக்கம்) விதிகள், 2014ன் விதி 30ன் துணை விதி (5)ன் பிரிவு (a) விஷயத்தில் மற்றும்

மியா இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் விஷயத்தில் ("நிறுவனம்" / "விண்ணப்பதாரர்")

Cin: U68200TN2025PTC178555

பதிவு அலுவலகம் : பழைய எண். 89, புதிய எண். 40, ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை, 600031 ...மனுதாரர்

செப்டம்பர் 05, 2025 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை **தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து மகாராஷ்டிர மாநிலத்திற்கு** மாற்றுவதற்காக நிறுவனத்தின் சங்கப் பதிவுக் குறிப்பாணையின் பிரிவு 2–ல் ஏற்பட்ட மாற்றத்தை உறுதிப்படுத் நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 13ன் கீழ் மத்திய அரசு, தென் பிராந்தியத்துக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை மாற்றும் திட்டத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்துடன் கூடிய புகார் படிவத்தை உறுதிமொழி ஆவணத்துடன் இணைத்து இந்த அறிவிப்பு விளம்பரம் வெளியான தேதியில் இருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் பிராந்திய இயக்குனர் அவர்களுக்கு **எம்சிஏ போர்ட்டலில் (www.mca.gov.in)** சமர்ப்பிக்கலாம் அல்லது பிராந்திய இயக்குனர் அவர்களுக்கு, 5வது தளம், சாஸ்திரி பவன், 26 ஹாடோஸ் சாலை, சென்னை – 600034 என்ற முகவரியில் நேரடியாக சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகலை விண்ணப்பதாரர் நிறுவனத்தின் கீழ்குறிப்பிட்டுள்ள, பதிவு அலுவலகம்: பழைய எண். 89, புதிய எண். 40, ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை, 600031 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மியா இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
ஜோசப் மார்ட்டின்
இயக்குனர்
DIN: 10196510

தேதி: 24 செப்டம்பர் 2025
இடம்: மும்பை

மேன்மைமிகு சாப நீதிமன்றம், சங்கராபுரம்.
இ.ம.எண்;1/2025 இன் நி.ம.எண்;102/2013 இன் மு.வ.எண்;29/2012

ஜெரோம் இம்மானுவேல்
த/பெ ராயப்பன்
மங்கலம் (கிராமம்),
காட்டுக்கொட்டாய்,
சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி
மாவட்டம் ......மனுதாரர்/3வது நபர்

எதிர்

ராயப்பன் த.பெ. பெரியநாயகம்
விரியூர் (கிராமம்),
சங்கராபுரம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்
(தற்காலம் நெ;12, ஜெய்சிந்தா நகர்,
மும்பை பாரத் வெல்பர் சொசைட்டி,
மகாராஷ்டிரா மாநிலம்)

...பிரதிவாதி/தீர்ப்புகடனாளி/ 2ம் எதிர்மனுதாரர்

பிரதிவாதி/தீர்ப்புகடனாளி/ 2ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு

இந்த நெம்பர் வழக்கில் மனுதாரர்/3வது நபரானவர், பிரதிவாதி/தீர்ப்புகடனாளி /2ம் எதிர்மனுதாரர் தாங்கள்பேரில் தாவா சொத்தைப்பொருத்து மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவிலும் தாங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 24.10.2025ம் தேதி அன்று காலை சுமார் 10.00 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் தாங்களாவது, தாங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துகொள்ள வேண்டியது தவறும்பட்சத்தில் ஒரு தலைபட்சமாக தீர்மாணிக்கப்படும் என்பதை தெரிவித்துகொள்ளப்படுகிறது.

சி. கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ.,பி.எல்.,
7. ராமஜெயம், பி.ஏ.,எல்.எல்.பி.,
நா. மோகன்ராஜ், பி.ஏ.,எல்.எல்.பி.,
வழக்கறிஞர்கள்
சங்கராபுரம்–606401.

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள். மத்திய சென்னை கோட்டம்.
ந.க.எண்.அ3/7260/2025
நாள்:09.10.2025
பிறப்பு சான்று

I.சந்தோஷ் குமார்,
RA3 தரங்கினி காம்ப்ளக்ஸ்,
மேற்கு முகப்பேர்
சென்னை–600 037 – மனுதாரர்

எதிராக

வருவாய் கோட்ட அலுவலர்,
கோட்டாட்சியர் அலுவலகம்,
மத்திய சென்னை கோட்டம். – எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் மகன் S. **ஹனிஸ் வசிகரன்** என்பவர் கடந்த 15.08.2012 தேதியன்று மேற்படி விலாசத்தில் பிறந்ததை பதிவு செய்யாமல் விடுபட்டதால், அந்த பிறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இதன் மீது எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 30 நாட்களுக்குள் மத்திய சென்னை கோட்டம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபணையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்ட அலுவலர்,
மத்திய சென்னை கோட்டம்.